நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 14 திங்கட்கிழமை (27.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

SATS-TECH ENGINEERS




NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

## ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் புலிகளால் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

ஐக்கிய நாடுகள் சபை, ஜீ-8, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் விடுத்திருக்கும் வேண்டுகோள்களை ஏற்று நேற்றுத் தொடக்கம் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்துவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அறிவிப்பு அரசாங்கத்தினால் முற்றாக நிராகரிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள போர் நிறுத்த அறிவித்தலை அரசு நிராகரித்துள்ளது. தற்போது போர் நிறுத்தம் தேவையற்றது என்றும் அவ்வாறு விடுதலைப் புலிகள் கோருவது நகைப்புக்குரிய ஒரு விடயம் என்றும் பாதுகாப்புத்துறையின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். (10ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாண சபைத் தேர்தல் ஐ.ம.சு.கூக்கு 68 ஆசனங்கள்

(கொழும்பு)

மேல்மாகாண சபை தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 15 இலட்சத்து 6 ஆயிரத்து 115 வாக்குகளுடன் 68 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி 6 இலட்சத்து 88 ஆயிரத்து 253 வாக்குகளைப் பெற்று (10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்று விமானத் தாக்குதல்; 32 பொதுமக்கள் பலி; 48 பேர் காயம்

(வவுனியா)

புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள பாதுகாப்பு வலயத்தின் மீது விமானப் படை விமானங்கள் நேற்று நடத்திய குண்டுத்தாக்குதல்களில் 32 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 48 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாதுகாப்பு வலயப் பகுதிமீது நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கும் பின்னர் 10.15 மணிக்கும் மீண்டும் 11 மணிக்கும் விமானப்படையினர் (10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் மீது பாரிய தாக்குதலுக்கு களமுனைகளில் இராணுவத்தினர் குவிப்பு!

### மக்களைக் காக்குமாறு அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

முல்லைத்தீவு கரையோரமாக உள்ள மக்கள் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள குறுகிய நிலப்பகுதி மீது பாரிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை இன்று அதிகாலையில் தொடங்குவதற்கான முழு அளவிலான தயாரிப்புகளை படையினர் மேற்கொண்டிருப்பதாக வன்னியில் இருந்து தகவல்கள் (10ஆம் பக்கம் பார்க்க)

## வலைஞர்மடம் படையினர் வசம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் அரசாங்கம் அறிவித்திருந்த பாதுகாப்பு வலயத்திலிருக்கின்ற வலைஞர்மடம் பகுதியை நேற்று அதிகாலை இலங்கை படையினர் கைப்பற்றியுள்ளதாக இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது. (10ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகும் என ஐந்து கல்வி வலய கல்விப் பணிப்பாளர்களும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் ஏப்ரல் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எனினும் மோதல்கள் காரணமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டுக்கு வந்த மக்களை தங்கவைப்பதற்கு பாடசாலைகள் பயன்படுத்தப்பட்டமையால் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் இரண்டாம் தவணைக் கல்வி (10ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளமுள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் இரு தரப்பினருக்கிடையில் கடும் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு வெள்ளமுள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதில் கடற்படையினர் நடத்திய தாக்குதல்களில் கடற்புலிகளின் 3 படகுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதுடன் 12 கடற்புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் பதில் பேச்சாளர் கொமாண்டர் மகேஸ் கருணாரத்ன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, நேற்று அதிகாலை (10ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் நால்வர் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள நொச்சிக்குளம் சமாதான சபையின் தலைவர் உட்பட நான்கு தமிழர்கள் மொறவேவ பிரதேசத்திலும் சாந்திபுரத்திலும் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மொறவே (10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும்

### இணைத்தலைமைகள் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா தலைமையிலான டோக்கியோ இணைத் தலைமை நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இணைத்தலைமைகள் (10ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவிலில் 5 மீனவர்கள் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலும் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐந்து தமிழ் மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

உகந்தை (10ஆம் பக்கம் பார்க்க)

சங்கானையில் புதுப்பொலிவுடன் மிளிரும் ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

அட்சய திருதியை

27.04.2009 திங்கட்கிழமை அட்சய திருதியை தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கோர் இனிய செய்தி. அன்றைய தினம் தங்க நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் விசேட விலைக் கழிவு வழங்கப்படுவதுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.



உத்தரவாதத்துடன் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

இல. 10, பஸ் நிலையம், சங்கானை.

# கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்புவரை எந்தவொரு கட்டிடத்தையும் காணவில்லை

## அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் விபரிப்பு

கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு வரை செல்லும் பாதையில் கட்டிடங்கள் எதனையும் காண முடியவில்லை.

இடையிடையே அமைந்திருந்த நகரங்கள் கூட அங்கு இருந்த இடம் தெரியாது அழிந்து போயிருந்தன. அங்கு உக்கிரமான போர் இடம் பெற்றதற்கான சான்றுகளே பெருமளவில் காணப்படுகின்றன என அங்கு சென்ற ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் பகுதிகளுக்கு கொழும்பு ரத்மலானை விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலமாக கடந்த வெள்ளிக்கிழமை அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஊடகவியலாளர்கள் முதலில் கிளிநொச்சிப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு கிளிநொச்சியில் இடம் பெற்ற படை நடவடிக்கைகள் தொடர்பில் 58 ஆவது படைப் பிரிவின் கட்டளைத்தளபதி சவிந்திர சில்வா விளக்கம் அளித்தார். மேலும் விடுதலைப் புலிகளிடம் இருந்து படையினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் குறித்த விபரங்களும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இதனையடுத்து கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் பகுதிகளுக்கு ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பொதுமக்கள் தீவிர சோதனைகளிற்கு உட்படுத்தப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பஸ்களில் வவுனியாவிற்கும் ஏனைய பகுதிகளிற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றமையை காணக் கூடியதாக இருந்தது. உடுதுணி மற்றும் பயணப் பொதிகளுடன் வரும் பொதுமக்கள் மேலும் இடம் பெயரும் முகமாக அங்காங்கே தமது பயணப் பொதிகளை கைவிட்டுவிட்டு இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

பலமைல் தூரம் நடந்து இராணுவத்தினரிடம் வரும் பொதுமக்களிற்கு இராணுவத்தினர் பிஸ்கட் வகைகள், குளுக்கோஸ் போன்ற உணவுகளை உடன் வழங்குகின்றனர். அவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகவே இருந்தது. தம்மிடமுள்ள அனைத்தையும் இழந்து மனநிலை பாதிக்கப்பட்டு உயிரை மட்டுமே கையில் பிடித்தபடி இருந்த அவர்களின் நிலை உள்ளத்தை நெகிழ வைத்தது எனத் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினரே நிலை கொண்டிருக்கின்றனர். மக்கள் பாதுகாப்பு வலயப் பிரதேசத் தில் இருந்து வெளியேறி வந்து இரணைப்பாலைச் சந்தியில் வீதியோரங்களில் தங் கியுள்ளவர்களை செய்தியாளர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். முல்லைத் தீவிலிருந்து இடம் பெயர்ந்து இவ்வாறு இரணப்பாலைச் சந்தி வீதியோரங்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர்கள் தமக்குக் குடி தண்ணீர் வசதி, உணவு வசதி போன்றவை வழங்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

புதுமாத்தளன் பகுதியில் நின்ற சமயம் அங்கே இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எறிகணைத் தாக்குதல்களையடுத்தே தாம் முல்லைத் தீவிலிருந்து இடம் பெயர்ந்ததாகக் கூறிய மக்கள் எந்தத் தரப்பினரது எறிகணை தம்மைத் தாக்கியது என்பதைக் கூற மறுத்து விட்டதாக அச்செய்தியாளர் தெரிவித்தார். (எ-1)

# யாழ்.கல்வி வலய மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்.கல்வி வலய மெய்வன்மை போட்டிகள் நாளை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதிவரை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. நாளை ஆரம்பமாகும் போட்டிகள் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும் என உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். நாளை ஆரம்பமாகும் போட்டிகளின் விபரம் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| 19வயது ஆண் 5000 மீற்றர் ஓட்டம் | இறுதி | 21வயது ஆண் 5000 மீற்றர் ஓட்டம் | இறுதி |
| 19வயதுப் பெண் 5000 மீற்றர் ஓட்டம் | இறுதி | 21 வயதுப் பெண் 5000 மீற்றர் ஓட்டம் | இறுதி |
| 17வயது ஆண் 1500 மீற்றர் ஓட்டம் | இறுதி | 17வயதுப் பெண் 1500 மீற்றர் ஓட்டம் | இறுதி |
| 19வயதுப் பெண் கோலுான்றிப்பாய்தல் | இறுதி | 17வயது ஆண் கோல் ஊன்றிப்பாய்தல் | இறுதி |
| 21வயதுப் பெண் கோலூன்றிப்பாய்தல் | இறுதி | 21வயது ஆண் கோலூன்றிப் பாய்தல் | இறுதி |
| 21 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் | தெரிவு | 17வயதுப் பெண் கோலூன்றிப்பாய்தல் | இறுதி |
| 21 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் | தெரிவு | 19 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் | தெரிவு |
| 21 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் | இறுதி | 19 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் | தெரிவு |
| 21 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் | இறுதி | 19 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் | இறுதி |
| 19 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் | இறுதி | 17 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் | தெரிவு |
| 17 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் | தெரிவு | 17 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் | இறுதி |
| 17 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் | இறுதி | | |

(ச)

# புலிகளின் குறிபார்த்துச்சுடும் அணிக்கும் இராணுவ சிறப்புப் படைக்குமிடையே மோதல்

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற மோதல்களின் போது இராணுவத்தின் சிறப்பு படையணிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் குறிசூட்டுத்தாக்குதல் அணிகளிடம் சிக்கி பலத்த இழப்புக்களை சந்தித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த கொழும்பு ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அம்பலவன்பொக்கணை பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற சமரின் போது இராணுவம் அதிகளவில் சிறப்பு படை அணிகளையும் கொமாண்டோ படையினரையும் பயன்படுத்தியிருந்தது.

எனினும் விடுதலைப் புலிகள் குறிபார்த்து சுடும் வீரர்களை அதிகம் நிறுத்தியிருந்தனர். இவர்களின் தாக்குதலில் சிறப்புப்படையணியைச் சேர்ந்த இரு அதிகாரிகள் உட்பட 20க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதுடன் பெருமளவானோர் காயமடைந்துள்ளனர்.

சிறப்பு படையணியின் அல்பா பிரிவைச் சேர்ந்த கப்டன் அஜித் கமகே விடுதலைப் புலிகளின் மண் பாதுகாப்பு அரணை கைப்பற்ற முயற்சித்த போது விடுதலைப் புலிகளின் குறிசூட்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார். அவரை மீட்கச்சென்ற மேலும் நான்கு சிறப்பு படையினரும் அதே இடத்தில் குறிபார்த்து கடும் தாக்குதலில் சிக்கி கொல்லப்பட்டிருந்தனர்.

கப்டன் கமகே மரணத்தின் பின்னர் உடனடியாக மேஜராக தரம் உயர்த்தப்பட்டுள்ளார். மாவிலாறு, சம்பூர் ஆகிய இடங்களில் மேற் கொள்ளப்பட்ட படைநடவடிக்கைகளில் சிறப்பாக செயற்பட்டதற்காக இவருக்கு இரு தடவைகள் 'வீர விக்கிரம விபூசண' விருதுகள் வழங்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்ட மேஜர் கமகே இராணுவத்தில் உள்ள மிகச்சிறந்த குறிபார்த்துச் சுடும் அதிகாரி ஆவர் எனவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே இரண்டாவது லெப். ஜெயத்திலக தனது குழுவினருடன் விடுதலைப் புலிகளின் பதுங்கு குழி ஒன்றை தாக்கியழிக்க முற்பட்டிருந்த போது விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் சிக்கி கொல்லப்பட்டிருந்தார்.

இத் தாக்குதலில் இவருடன் மேலும் 5 படையினர் கொல்லப்பட்டதுடன் 26 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

ஐந்து நாட்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளை உளவு பார்ப்பதற்குச் சென்ற ஜெயதிலக்க விடுதலைப் புலிகளின் மண் அணை ஒன்றில் இரகசியமாக ஏறி நின்றவாறு விடுதலைப்புலிகளின் மணல் அணைகளை கைப்பற்றுவது இலகுவானது என தனது மேலதிகாரிக்கு தெரிவித்திருந்தார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)


## விற்பனைக்கு

சண்டெல் Phone விற்பனைக்கு உண்டு..

தொடர்பு:0602217139 (2563)


# ஒருதலை...

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னியில் ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலத்தை தடுத்து நிறுத்தவும், இந்தப் பேரவலத்தினை தடுத்து நிறுத்தும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபை, ஜி-8, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் விடுக்கும் வேண்டுதல்களை ஏற்றும் நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்துகின்றனர்.

இதன் அடிப்படையில் நாம் அனைத்து வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளையும் கால வரையறையற்ற முறையில் இடைநிறுத்துவதற்கு முடிபு செய்துள்ளோம். அரச படைகள் வன்னியில் தொடர்ந்து நடத்திவரும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களுக்கு முரணனான போர் நடவடிக்கைகளினால் எமது மக்கள் அனுபவிக்கும் துன்பம் அதி உச்ச அளவினை எட்டியுள்ளது.

ஒருபுறம் முல்லைத்தீவு கரையோரங்களில் உள்ள எமது கட்டுப்பாட்டு பகுதிகளை சுற்றி வளைத்து குவிக்கப்பட்டுள்ள சிங்கள முப்படைகளினதும் தாக்குதல்களுக்குள் அகப்பட்டுள்ள ஒரு இலட்சத்து 65ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் நாளாந்தம் எறிகணை வீச்சு, வான் குண்டுத் தாக்குதல் மற்றும் பலவித போர் அச் சுறுத்தல்களுக்கு உள்ளாகி உயிரிழப்புகளையும், படுகாயங்களையும் எதிர் கொண்டு வருகின்றனர்.

கடந்த பல மாதங்களாக திட்டமிட்ட முறையில் அரசினால் இம் மக்களுக்கான உணவு, மருந்து மற்றும் பிற மனிதாபிமான வழங்கல்கள் இடைநிறுத்தப்பட்டமையினால் பட்டினி அபாயம் ஏற்பட்டுள்ளது. மறுபுறம் இப்பகுதிகளில் இருந்து பல வழிகளிலும் வெளியேறிய போது படைகளிடம் அகப்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் அனைத்துலக விதிகளுக்க முரணாக தடுப்பு முகாம்களிலும், இராணுவ வதை முகாம்களிலும் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்கள் அனைத்துலக விதிகளுக்கு உட்பட்ட பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள் கிடைக்கப்பெறாது துன்புறுத்தப்படுகின்றனர். அவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர்வதற்கு படையினர் அனுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையினால் அந்த மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

மேலும், போர் முனைகளுக்கு இவ்வாறு அகப்பட்ட மக்களின் ஒரு பகுதி கொண்டுவரப்பட்டு மனிதக் கேடயங்களாக பாவிக்கும் முயற்சிகளும் அரச படைகளினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் ஐ.நா. இப்பகுதிகளுக்கு மனிதாபிமான வழங்கல் வழிகளை ஏற்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளை நாங்கள் வரவேற்பதுடன் இம் முயற்சிகளுக்கான ஒத்துழைப்புகளையும் முழுமையாக வழங்கிட தயாராக உள்ளோம்.

மேலும் ஜி-8 நாடுகளின் வெளிவிவகாரத் துறை அமைச்சர்கள் வெளியிட்ட கூட்டறிக்கை, வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கை, இந்திய அமைச்சர்கள் வெளியிட்ட அறிக்கைகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் அழைப்பு என்பவற்றினை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம்.

இன்று ஏற்பட்டுள்ள வன்னிப் பேரவலங்களை உடனடியாக முடிபுக்கு கொண்டுவந்து மக்களின் இழப்புகளை நிறுத்தி, மனிதாபிமான வழங்கல்களை விநியோகிப்பதனை உறுதிப்படுத்துவதற்கு போர் நிறுத்தப்பட்ட சூழல் அவசியமானது என்கின்ற அனைத்துலக சமூக வேண்டுதல்கள் மிகவும் முக்கியமானது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். இதற்கான முதல் முக்கியபடியாக நாங்கள் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த அறிவிப்பினை இன்று (நேற்று) விடுக்கின் றோம்.

அரசும் இத்தகையதொரு போர் நிறுத்த ஏற்பாட்டுக்கு உடன்படுமாறு அனைத்துலக சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறான போர் நிறுத்த ஏற்பாடானது மனிதப் பேரவலத்தினை உடனடியாக தடுத்து நிறுத்துவதுடன் இன்றுள்ள மனிதப் பேரவலத்தின் பின் விளைவுகள் இலங்கைத் தீவின் மக்கள் சமூகங்கள் மீதும், பிராந்தியம் மீதும் ஏற்படுத்தக் கூடிய நீண்டகாலச் சிக்கல்களுக் கும் முடிவு தரும் வழியினை திறக்கும் என்று நம் புகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## நிகழ் காலம்

சீனாவில் ரின்சாய் என்ற புகழ் பெற்ற ஞானி ஒருவர் இருந்தார். ஒரு நாள் அவரைத் தேடி ஓர் இளைஞன் வந்தான்.

“என்னப்பா சமாச்சாரம்?” என்று கேட்டார். “ஐயா நான் ஒரு உண்மையைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அப்படி தேடிக்கொண்டிருக்கும் போது நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள்” என்றான். உடனே அந்த ஞானி.

“சரி... அந்த உண்மைச் சமாச்சாரத்தையெல்லாம் இப்போதைக்கு விட்டுவிடு. நீ இப்பொழுது பீஜிங்கிலிருந்து வருவதால் உன்னிடமிருந்து நான் சில விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பீஜிங்கில் இப்பொழுது அரிசியின் விலை எப்படி இருக்கிறது? என்றார்.

இதைக் கேட்டதும் அந்த இளைஞன் திகைத்துப் போய் நின்றான். ஒரு மகா ஞானியிடமிருந்து இப்படி ஒரு கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை பீஜிங்கிலுள்ள அரிசி விலைக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம் என்று அவனுக்கு புரியவில்லை. அங்கே அரிசி என்ன விலை விற்கிறது என்பது இங்கே ஒரு சாதாரண விடயம். வந்த இளைஞனோ மிகவுயர்ந்த உண்மையைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறான். அப்படி வந்தவனிடம் இப்படியொரு கேள்வியை கேட்டுவிட்டாரே? அவன் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

மெதுவாகச் சொன்னான் சுவாமி என்னை மன்னித்துக் கொள்ளவேண்டும் மரியாதைக் குறைவாகப் பேசுவதாக நினைத்துவிடக் கூடாது. இந்த மாதிரியான கேள்வி களை இனிமேல் என்னிடம் கேட்காதீர்கள் ஏனெனில் என் னிடம் எந்த எதிர்காலமும் இல்லை. என் கடந்த காலப் பாதைகளை நான் மறந்து விட்டேன்.

ஏறிவந்த ஏணிகளை உதறித் தள்ளி விட்டேன். இறந்த காலத்தைப் பொறுத்தவரையில் நான் இப்பொழுது இறந்து போனவன்” என்றான். இதைக் கேட்டதும் அந்த ஞானி இவன் தோளில் தட்டிக்கொடுத்தார்.

“உட்காரப்பா இனிமேல் நான் உண்மையைப் பற்றிப் பேசுவோம். நீ கடந்தகாலச் சுமைகளை தூக்கிக் கொண்டிருக்கிறாயா இல்லையா என்பதை தெரிந்து கொள்வதற்குத் தான் அப்படிக் கேட்டேன்.

நீ அதைச் சொல்லியிருந்தால் உடனே உன்னை விரட்டியிருப்பேன். இறந்த காலத்தைப் பற்றிக் கொண்டிருப்பவனால் உண்மையை உணர முடியாது.

ஏனெனில் உண்மை என்பது இதோ இப்பொழுது இங்கே இந்தக் கணத்தில் இருக்கிறது. இறந்த காலத்துடனோ எதிர்காலத்துடனோ சம்பந்தப்பட்டதல்ல.

உண்மை காலம் கடந்தது. காலமற்றது. இறந்தகாலத்தில் வாழ்பவனால் நிகழ்காலத்தை உணர முடியாது. உண்மையும் காலமும் ஒன்று சேர்ந்து நடக்காது –என்று விளக்கம் கொடுத்தார்.

நிகழ்காலத்தில் வாழத் தெரியாத மனிதரை ஒரு தோட்டத்துக்கு அழைத்துக்கொண்டு போய் ஒரு ரோஜா மலரை அவரிடம் காட்டுங்கள்.

“பாருங்கள் ... எவ்வளவு அழகான ரோஜாப்பூ” என்று சொல்லுங்கள். உடனே அவர் என்ன சொல்வார் தெரியுமா?

“இதனால் என்ன பிரயோசனம்? மாலைக்குள் எல்லாமே உதிர்ந்து விடும் என்பார்”

“இளமை எவ்வளவு சுகம்!” என்று சொல்லுங்கள் “சீக்கிரம் முதுமை வந்துவிடும்” என்பார்.

மகிழ்ச்சியைப் பற்றிப் பேசினால் அது ஒரு மாயை விலகிப் போய்க்கொண்டே இருக்கும் என்பார். ஆனால் நிகழ் காலத்தில் வாழத்தெரிந்த ஒருவரை பூங் காவுக்கு அழைத்துச் செல்லுங்கள்.

வண்ண மலர்களுடன் அவர் ஆடிப்பாடி மகிழ்வார்.

“நான் ஏன் வராத மாலைப் பொழுதைப் பற்றிக் கவலைப் படவேண்டும்?“என்பார். இந்த மலர்கள் உதிர்ந்து போவதாக இருந்தால் கூட இப்பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறது என்பார்

ஒரு அம்மா, காடுமேடெல்லாம் அலைந்து ஒரு சாமியாரைக் கண்டு பிடித்தார். அவரிடம் “நான் உண்மையைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். 5 வருடத்துக்கு முன்னர் ஒரு நாள் என் வீட்டுக்காரர் மீது கரண்டியை வீசி விட்டேன். உடனே அவர் வீட்டை விட்டு போய்விட்டார் அவர் கிடைப்பாரா இல்லையா என்று கூறுங்கள் என்றார்.


“இனி மேல் நீ எதையும் அவர் மீது வீசுவதில்லை என்று உறுதி மொழி எடுத்தால் அவர் உனக்குக் கிடைப்பார்” என்றார்.

“உறுதி மொழி கொடுக்கிறேன்” என்றார். அப்படியானால் புறப்படு. நான்தான் அது என்று சொல்லி வேஷத்தைக் கலைத்து விட்டு புறப்பட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கையில் ரங்கநாதர் கோவில் கட்டினால் பிரச்சினை தீரும்

## புரோகிதர் சங்கம் கருத்து



(திருச்சி)

இலங்கை பிரச்சினை தீராத பிரச்சினையாக உருவெடுத்துக் கொண்டு இருக்கிறது.

ஆசியக் கண்டத்திலேயே எந்த நாட்டிலும் நடைபெறாத அளவுக்கு நீண்ட காலப் போராக 30 ஆண்டுகளாக போர் நடைபெற்று வருகிறது.

இதனால் இலங்கையில் ஆயிரக்கணக்கான உயிர் இழப்பு, பொருளாதார வீழ்ச்சி, பசி, பட்டினி என பேரழிவைச் சந்தித்து வருகிறது.

இந்தப் பேரழிவுக்கு ஆன் மீகவாதிகள் தங்கள் தரப்பு கருத்துக்களை எடுத்து வைக்கவும் தயங்கவில்லை.

திருச்சி அருகே உள்ள ஸ்ரீரங்கத்துக்கும் இலங்கை அழிவுக்கும் சம்பந்தம் இருப்பதாக புராணங்களை எடுத்துக்காட்டி கூறுகிறார்கள்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலானது 108 திருப்பதிகளில் முதல் கோவிலாக விளங்குகிறது. இங்கு பல நூற்றாண்டுகளாக இராஜகோபுரம் எழுப்பப்படாமல் இருந்தது. 1980களில் இராஜகோபுரம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று.

இந்த ராஜ கோபுரம் உருவனால் அது இலங்கைக்கு ஆபத்து இலங்கையில் நீண்ட கால போர் ஏற்படும் என்று அன்றே ஆன்மிகவாதிகள் ஆரூடம் கூறினார்கள் இது திருச்சி ஸ்ரீரங்கம் பகுதியில் அப்போது பரபரப்பாக பேசப்பட்டது.

தற்போது இலங்கையில் ஸ்ரீரங்கநாதர் கோவில் கட்டினால் பிரச்சினை தீரும். மக்கள் சுபிட்சமாக வாழ்வார்கள் என்று தென்னிந்திய புரோகிதர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஆற்காடு நரசிம்மா அய்யர் கருத்து தெரிவித்துள்ளார். இதற்காக புராண கதை ஒன்றையும் சொல்லி இருக்கிறார்.

இராமர் இலங்கைக்குச் சென்று இராவணனை வதம் செய்த பின் அவனது தம்பி விபீஷணனுக்கு இலங்கை ராஜ்ஜியத்தை அளித்து அதன் அரசனாக பட்டம் சூட்டினார். பின்னர் இராமர் அயோத்தி திரும்பியதும் அங்கு ராமருக்கு வெகு விமரிசையாக பட்டாபிஷேகம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட விபீஷணனுக்கு இராமர் தனது முன்னோர்களால் ஆராதிக்கப்பட்டு வந்த இட்சுவாகு வம்சத்தின் குலர தனமான ஸ்ரீரங்க விமானத்தையும் ஸ்ரீரங்க நாதரையும் பரிசாக அளித்தார். நீ என் தோழன் என்ற காரணத்தால் இட்சுவாகு வம்ச அரசர்களால் பக்தி சிரத்தையுடன் பூஜிக்கப்பட்டு வந்த தெய்வத்தை உனக்கு கொடுத்து இருக்கிறேன் நீ இதை குலதனமாக பாவித்து இலங்காபுரியில் வைத்து வழிபட்டு தர்மம் தவறாமல் அரசாண்டு வருவாயாக என்றார்.

அதைப் பெற்றுக்கொண்ட விபீஷணன் தன் தலையில் வைத்துக்கொண்டு இலங்கை செல்லும் வழியில் நடுப்பகல் ஆனதால் காவிரிக்கரை யில் உள்ள ஆனந்த பீடத்தில் ஸ்ரீரங்க விமானத்தை இறக்கி வைத்துவிட்டு நீராடி ஸ்ரீரங்க நாதருக்கு உச்சிகால பூசைகள் செய்தார்.

அந்த நேரத்தில் முனிவர்களும் பக்தர்களும் வந்து வழிபட்டு ஸ்ரீரங்க நாதர் இங்கேயே இருக்க் வேண்டும் என்று பக்தி சிரத்தையுடன் பிரார்த்தித்தனர். ஸ்ரீரங்க நாதர் அங்கேயே தங்கி விட்டார். பின்னர் பல அரசர்கள் ரங்கநாதருக்கு பிரமாண்டமான முறையில் கோவிலையும் 7 பிரகார மதிற்சுவர்களையும் கட்டினார்கள்.

இதுவே ஸ்ரீரங்கம் என்றும் வைணவ 108 திருப்பதிகளில் முதல் கோவிலாக போற்றப்பட்டு வருகிறது.

விபீஷணன் வெறுங்கையுடன் திரும்பியதாலும் இலங்கை செல்ல வேண்டிய ரங்கநாதர் ஸ்ரீரங்கத்திலேயே தங்கி விட்டதாலும் இலங்கையில் பிரச்சினை தோன்றிக் கொண்டே இருக்கிறது.

ஆகவே இலங்கையில் ஸ்ரீரங்க நாதர் ஆலயம் கட்டினால் அங்கு அமைதி நிலவும் மக்கள் சுபிட்சமாக வாழ்வார்கள் என்கிறார் புரோகிதர் நரசிம்ம ஐயர். (6)

# அரச வங்கி ஊழியர்களுக்கு இவ்வருடம் முதல் ஓய்வூதியம் வழங்க அரசு இணக்கம்

(கொழும்பு)

அரச வங்கி ஊழியர்களுக்கு 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதி முதல் ஓய்வூதியம் வழங்க அரசாங்கம் இணங்கியுள்ளதாகவும் இதனால் இது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நன்றி தெரிவிப்பதாகவும் வங்கி ஊழியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தொடர்ந்து 10 வருடம் வங்கியில் கடமைபுரிபவர்களுக்கே இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளன.

தம்மை ஓய்வூதியத் திட்டத்தினுள் உள்வாங்க வேண்டுமென வங்கி ஊழியர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்ததுடன் பல்வேறு போராட்டங்களையும்மேற்கொண்டு வந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு அண்மையில் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக வங்கி ஊழியர்க சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (6)

# இராசி பலன்

27.04.2009
(சித்திரை 14, திங்கட்கிழமை)
துதியை காலை 6.16 மணிவரை
திருதியை பின்னிரவு 4.10 மணிவரை
கார்த்திகை முற்பகல் 11.26 மணிவரை
இராகுகாலம் 7.29-8.59மணிவரை
சுபநேரம் 11.59 - 1.29 மணிவரை
மங்கையற்கரசியார் குருபூசை- அக்சய திருதியை

| | |
|---|---|
| மேடம் | வேலைச் சுமை,எடுத்த காரியம் தாமதமாகும்,தனவிரயம் ,விவாதம் |
| இடபம் | நண்பர்கள் உதவி,நல்ல முயற்சி, ஜனவசியம் ,போசன சுகம். |
| மிதுனம் | பிதா சிந்தை,கோபப்படுதல்,சுப செலவு,காரிய அலைச்சல். |
| கடகம் | தனதானியச் சேர்க்கை, காரிய நன்மை,பெருமையடைதல், நிலை மாறறம். |
| சிங்கம் | சுப நிகழ்வு ,உற்சாகம்,காரிய சித்தி,பிறா உதவி. |
| கன்னி | ஆன்றோரால் மதிக்கப்படுதல்,அச்சமான நிலை ,பிரயாணம், முயற்சி தாமதம் |
| துலாம் | எதிர்பாராத அச்சம், பணக் குறைவு, காரிய தடங்கல் உடல் நலக்குறைவு |
| விருச்சிகம் | குடும்ப சுகம்,முயற்சி கைகூடும், தனலாபம்,ஆரோக்கியம். |
| தனுசு | திடீர் பயணம், பணவருவாய், உடல் நலம்,முயற்சி கைகூடும். |
| மகரம் | முயற்சி தாமதம்,குடும்பக் கவலை, தனவிரயம், மரியாதைக் குறைவு. |
| கும்பம் | பயந்தசுபாவம் ,ரோக நிலை, நல்ல முயற்சி,தொழில் நன்மை. |
| மீனம் | இனிய சம்பவம்,நண்பர்கள் உதவி,சயன சுகம்,காரிய நன்மை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 40 | 50 |
| தக்காளி | 150 | 160 |
| அவரை | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 |
| கோவா | 15 | 20 |
| கரட் | 20 | 30 |
| பூசணி | 15 | 40 |
| புடோல் | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 30 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 |
| பாகற்காய் | 100 | 90 |
| வெண்டிக்காய் | 40-60 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 |
| பயிற்றங்காய் | 40 | 40 |
| லீக்ஸ் | 160 | 140 |
| போஞ்சி | -- | -- |
| கீரை – 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |

## கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (6-4)

## தந்தை செல்வாவின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

தந்தை செல்வாவின் 32ஆவது நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாணத் தலைவருமாகிய செல்லையா விஜயரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கூட்டணி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (6-4)

## ஹற்றன் நஷனல் வங்கிக்கிளை

பருத்தித்துறை நகரப்பகுதியில் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை ஒன்று விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது. முதலாவது கிளை நகரப்பகுதியில் இருக்கின்ற போதிலும் இரண்டாவது கிளை தும்பளை-பருத்தித்துறை வீதியில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (6-10)

## கொரிய நாட்டு பிரதிநிதிகள் குழு யாழ்.தொழில்நுட்ப கல்லூரிக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

கொரிய நாட்டின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி சொங்மின்ஹயன் உட்பட 7 பேர் கொண்ட பொறியியலாளர் குழு எதிர்வரும் மேமாதம் 12 ஆம் திகதி யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தரவுள்ளனர்.

இதன்போது கொரியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட நவீன இயந்திர உபகரணங்களினை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய கட்டடத்தில் பொருத்துவதற்குரிய ஏற்பாட்டினை செய்வதுடன் தொழில்நுட்ப பூங்காவில் தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக ஆராயவுள்ளனர் என யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார். (ஓ-30)

## விதை விற்பனையாளர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை

(யாழப்பாணம்)

இலங்கையிலுள்ள அனைத்து விதை விற்பனையாளர்களும் கண்ணொறுவ விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை பணிப்பாளருடன் 2003 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க விதைச் சட்டத்தின் பிரிவு 08 இற்கேற்ப தங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன்பிரகாரம்,

விதை/நடுகைப் பொருட்களை இறக்குமதி செய்தல், வர்த்தக நோக்கங்களுக்காக விதை/ நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல், விதை/ நடுகைப் பொருட்களை பகிர்ந்தளித்தல், விதையினைப் பதனிடுதல், பொதியிடுதல் /மீளப் பொதியிடுதல், விதை விற்பனை முகவர்கள் சில்லறை அல்லது மொத்த விதை வியாபாரிகள், நாற்றுமேடையாளர்கள், விதைகள்/நடுகைப் பொருட்கள் விற்பனையாளர்கள், உள்நாட்டு சந்தைக்கு விதை/ நடுகைப் பொருட்களை விநியோகிப்பதுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் செயற்பாடுகள் என்பவற்றை மூன்பதிவு செய்ய வேண்டுமெனவும் முன்பதிவின்றி விதை மற்றும் நடுகைப் பொருட்களை உள்நாட்டு சந்தைக்கு விநியோகிப்பது உள்ளிட்ட செயற்பாட்டில் ஈடுபடுவதானது குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 16 ஐ மீறியதாகவே கருதப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக விவசாய ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலியில் இயங்கும் விதை அத்தாட்சிப்படுத்தல் அலுவலகத்திலிருந்து அல்லது பணிப்பாளர் விதை அத்தாட்சிப்படுத்தல் தாவரப் பாதுகாப்புச் சேவை இல 74 கண்ணொறுவ, பேராதனை என்ற விலாசத்திற்கு சுயமுகவரியிடப்பட்டு, முத்திரையிடப்பட்ட கடித உறை ஒன்றை அனுப்பி தபால் மூலமாகவும் பதிவுக்கான விண்ணப்பப் படிவங்களை தேவையான தகவல்களுடன் பெற்றுக்கொள்ளமுடியுமென யாழ்.மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை உத்தியோகத்தர் திரு.அ.றமணிதரன் அறிவித்துள்ளார். (6)



அரியாலை காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் ப.கிரிதரன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-அலுவலக செய்தியாளர்)




## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வோதய நிறுவனத்தின் ஏற்பாட்டில் சொண்ட் நிறுவனத்தின் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் கிராம மட்ட பணியாளர்கள், தொண்டர்கள் ஆகியோருக்கான மிதிவெடி அபாயக் கல்வி தொடர்பான் கருத்தரங்கு இன்றும் நாளையும் முற்பகல் 9 மணிமுதல் 3 மணிவரை சொண்ட் நிறுவன மண்டபத்தில் நடைபெற உள்ளதாக சொண்ட்நிறுவன திட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

## கால்நடைகளுக்கான இலவச நடமாடும் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கான இலவச நடமாடும் மருத்துவசேவை இன்று திங்கட்கிழமை கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இம் மருத்துவச் சேவையில் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கல், செயற்கை முறை சினைப்படுத்தல்,மருத்துவ பரிசோதனைகள் போன்றன இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4-36)

## அந்திராய்க்குளம் புனரமைப்பு

(சாவகச்சேரி)

சரசாலை வடக்கு அந்திராய்க்குளம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.அரசாங்க அதிபரின் தலைமையில் அப்பிரதேச விவசாய சம்மேளனத்திடம் கையளிக்கப்பட்டது.

சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் பே.கந்தசாமி அதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொண்டார். (6-29)

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(ஊர்காவற்றுறை)

அரச ஓய்வூதியர்களுக்கான மேமாத ஓய்வூதியக் கொடுப்பனவு மே மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளதாக ஓய்வூதியத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வெசாக் தினத்தையொட்டியே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## சைக்கிள் - வான் விபத்தில் படுகாயமடைந்து கோமா நிலையில் சிகிச்சைபெற்றவர் மரணம்

(யாழ்பாணம்)

சைக்கிள்-வான் விபத்தில் படுகாயமடைந்து ஒருமாதம் அளவில் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மரணமானார்.

இச் சம்பவத்தில் கந்தரோடைமேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்துரை - தனபாலசிங்கம் (வயது 72) என்பவரே மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, பிரஸ்தாப நபர் கடநத் 23 ஆம்திகதி சுன்னாகம் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை வான் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவருக்கு கோமா நிலையில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், சிகிச்சை பயனளிக்காமல் பிரஸ்தாபநபர் நேற்று மரணமடைந்துள்ளார். இம் மரண விசாரணையை மேற்கொண்ட மல்லாக நீதிவான் பிரபாகரன், மரண விசாரணையின் பின் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (6-7)

## யாழ்.நலன்புரி நிலைய மக்களுக்கு இந்து அமைப்புகளால் தொடர்ந்தும் உதவி

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து வந்து யாழ்.நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மேலும் பல இந்து அமைப்புக்களும், நிறுவனங்களும் நிதியுதவி வழங்கியுள்ளன.

நல்லை ஆதீனத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிதி வழங்கும் நிகழ்வில் கட்டப்பிராய் ஸ்ரீ அருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் 56 ஆயிரம் ரூபாவையும், நீர்ப்பாசன திணைக்களம் 36 ஆயிரம் ரூபாவையும்,சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் 50 ஆயிரம் ரூபாவையும், உரும்பிராய் மகளிர் சிக்கன கூட்டுறவு சங்கம் 20 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளன. மேலும் ஜேர்மனி தர்மராசா வசந்தி 25 ஆயிரம் ரூபாவையும், பிரான்ஸ் யோகநாதன் சாந்தி 20 ஆயிரம் ரூபா மற்றும் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளையும் வழங்கியுள்ளனர்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளிடம் இவ்வுதவிகள் கையளிக்கப்பட்டன. (6)



யாழ்ப்பாணம் சுப்பிரமணிய பூங்கா நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ மங்கல விளக்கேற்றுவதையும், அமெரிக்க பிரதிநிதி ஆமோர்ஸ் அவுக்கர் பெயர்ப்பலகையை திறந்து வைப்பதையும், அரச அதிபர் கே.கணேஸ், சொய்சா ஆகியோர் நாடாவெட்டுவதையும், விருந்தினர்கள் பூங்காவினைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# இலங்கையில் தமிழர்களுக்கு நீதிகிடைக்க ஒரே வழி தனி ஈழம் அமைப்பது தான்!

## அதை அமைக்கும் நடவடிக்கையை நான் நிச்சயம் செய்வேன்

## ஜெயலலிதா பரபரப்பு வாக்குறுதி

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்க ஒரே வழி தனி ஈழம் அமைப்பது தான். அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் கூடிய புதிய மத்திய அரசு அமைந்தால் தனிஈழம் அமைக்க தேவையான நடவடிக்கையை நான்எடுப்பேன் என்று ஒரு பரபரப்பான வாக்குறுதியை அதிமுக தலைவர் செல்வி ஜெயலலிதா வழங்கியிருக்கின்றார்.



இது தொடர்பாக தமிழ் நாட்டில் உள்ள ஈரோட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடை பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது ஜெயலலிதா மேலும் தெரிவித்துள்ளதாவது,

வாழும்கலை, அமைப்பின்நிறுவுனர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி தலைமையில் அவரது அமைப்பைச் சேர்ந்த குழுவினர் அண்மையில் சிலநாட்களுக்குமுன்பு இலங்கைசென்று அங்குள்ள சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களோடு உரையாடி விட்டு வந்திருக்கின்றனர்.

இது வரை யாரும் செல்லாத பகுதிகளான, வவுனியா, முல்லைத்தீவு, ஆகிய பகுதிகளுக்கு எல்லாம் அவர்கள் சென்று வந்து இருக்கின்றனர்.

எனது தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்திற்கு இடையில் 23 ஆம் திகதி நான் சென்னை வந்த போது, வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்கள் என்னைச் சந்தித்தார்.

அப்போது இலங்கைத் தமிழர்களின் அவலங்கள் பற்றிய சிடிக்கள் ,போட்டோக்கள் கொடுத்தார்.அந்த காட்சிகளை பார்த்து நான் பெரிதும் அதிர்ச்சி அடைந்தேன். மிகவும் மன வேதனை அடைந்தேன்.

இப்படி வாழ்வதை விட சாவதே மேல் என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு மோசமான நிலையில் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். அந்த அளவுக்கு அவர்களை இலங்கை அரசு மிகவும் கேவலமாக, கொடூரமாக நடத்தி வருகிறது.

நிழலுக்கு மரங்கள் கூட இல்லாத இடத்தில், பாலை வனத்தில், கட்டாந்தரையில் இவர்கள் தங்க வைக்கப்படுகிறார்கள். புல் பூண்டு கூட அந்த இடங்களில் கிடையாது. அனைத்தும் தகர கொட்டகை போட்ட முகாம்கள்.

இந்த முகாம்களை சுற்றி முள் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் தான் இவர்கள் இருக்க வேண்டும். எந்தக் காரணத்தை கொண்டும் முகாம்களை விட்டு வெளியே செல்ல இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

வேறு இடங்களில் உள்ள இவர்களுடைய உறவினர்கள் , இவர்களைப் பார்க்கச் சென்றால் கூட முகாம்களுக்குள் அவர்கள் அனுமதிக் கப்படுவதில்லை. முள் வேலிக்கு வெளியில் இருந்து தான் அவர்கள் பேசிக் கொள்ள வேண்டும் . அவர்களது எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்டு விட்டன.

இதையெல்லாம் பார்க்கின்ற போது, ஜெர்மனியில் நடந்த ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சி தான் தடுப்புவதை முகாம்களை நடத்தி யூதர்களைக் கொடுமைப்படுத்தி அழித்த ஹிட்லர் ஆட்சி தான், நினைவிற்கு வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு, சிங்களவர்களோடு சம உரிமை வழங்கும் எண்ணமே இலங்கை அரசுக்கு கிடையாது ஒரே அடியாக இலங்கையில் தமிழ் இனத்தையே அழித்து விட வேண்டும் என்பது தான் இலங்கை அரசின் ஒரே செயல் திட்டமாக உள்ளது.

இந்திய அரசின் இரு தூதுவர்களும் இலங்கை அதிபரை தற்போது சந்தித்து விட்டு திரும்பியுள்ளனர். என்ன சாதித்தார்கள்?... இதனால் என்ன பலன் ஏற்பட போகிறது?... எதுவுமே இல்லை. இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் என்று நாம் கேட்கிறோம். இது மட்டும் போதாது. இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அவர்கள் சகஜ வாழ்வு வாழ வேண்டும். சிங்கள மக்களுக்கு உள்ள அனைத்து உரிமைகளையும் அவர்கள் பெற வேண்டும்.

இதற்கு ஒரே வழி தனி ஈழம் அமைப்பது தான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் கூடிய புதிய மத்திய அரசு அமைந்தால், எங்கள் சொல்படிகேட்கும்மத்திய அரசுஅமைந்தால் ,தனி ஈழம் அமைக்க, நடவடிக்கை மேற் கொள்ளப் படும். நான் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பேன் என்றார். (6)

## இராமேஸ்வரத்தில் தீவிர பாதுகாப்பு

(கடலூர்)

முல்லைத்தீவு பகுதியிலிருந்து இருவர் தப்பிவந்ததையடுத்து கடலூரில் இருந்து இராமேஸ்வரம் வரை உள்ள கடல்பகுதியில் பாதுகாப்பு பணி தீவிரப்படுத்தப்ப்ட்டுள்ளது. இலங்கை போர் தீவிரமடைந்துள்ளதால் அகதிகளின் வருகை அதிகரிக்கும் என கடலோரப்பாதுகாப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.கடலூரிலிருந்து இராமேஸ்வரம் வரையிலான கடல் பகுதியில் பாதுகாப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் கடலோரப் பகுதி கிராம மக்களைச் சந்தித்து ஊருக்குள் அடையாளம் தெரியாத நபர் மற்றும் கடலில் மர்மமான பொருட்கள் மிதந்தால் உடன் தகவல் தெரிவிக்க கேட்டுக்கொண்டனர். (6)

## இலங்கை தமிழர்களுக்காக சிறைக் கைதிகள் உண்ணாவிரதம்

விருது நகரில் சமீபத்தில் சிறையில அடைக்கப்பட்டுள்ள ராஜ் , ரமேஸ்குமார், செல்வராஜ், மாரீஸ்வரன், பழனிகுமார், செல்வம் உட்பட 7 கைதிகள், இலங்கையில் தமிழர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்துவதை கண்டித்து உண்ணாவிரதம் இருக்க முடிபு செய்து விருதுநகர் மாவட்ட சிறைத்துறை அதிகாரியிடம் அனுமதி கேட்டனர். அனுமதி கிடைக்காத நிலையிலும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சிறைக்குள் அவர்கள் உண்ணா விரதம் மேற் கொண்டனர். இதையடுத்த அவர்கள் நேற்று முன்தினம் மதுரை மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

## இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி பெண்கள் நடத்திய உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது

### தேர்தலில் பிரசாரம் செய்யப்போவதாக அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி சென்னையில் பெண்கள் நடத்திய சாகும் வரை உண்ணா விரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய சோனியா காந்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஈழத் தமிழர் படுகொலைக்கு எதிரான பெண்கள் அமைப்பைச் சேர்ந்த 20 பேர் கடந்த 13 ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணா விரதத்தை தொடங்கினார்கள்.

சென்னை ம.தி.மு.க தலைமை அலுவலகமான தாயகத்தில் நடந்த இந்த போராட்டத்திற்கு பேராசிரியை சரஸ்வதி தலைமை தாங்கினார்.



போராட்டத்தின் போது உடல் நிலை மோசமடைந்த 5 பெண்கள் கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அங்கும் அவர்கள் உண்ணா விரதத்தை தொடர்ந் தனர். நேற்று முன்தினம் 13 ஆவது நாளாக உண்ணா விரதம் தொடர்ந்தது.

இந்த நிலையில் பல்வேறு அமைப்புக்களின் கோரிக்கை யையும் ஜெயலலிதாவின் வேண்டு கோளையும் ஏற்று உண்ணா விரத்தை கைவிடுவதாக போராட்டக் குழுவின் தலைவர் பேராசிரியை சரஸ்வதி அறிவித்தார்.

இது தொடர்பாக பேராசிரியை சரஸ்வதி நிருபர்களிடம் கூறியதாவது ,

சோனியாவே போரை நிறுத்துங்கள் என்று ஒற்றைக் கோரிக்கையை முன் வைத்து நாங்கள் நடத்திய இந்த போராட்டத்தை சோனியா காந்தி தாயுள்ளத்தோடு செவி சாய்ப்பார் என்று நாங்கள் நம்பினோம்.

ஆனால் , அவரிடம் இருந்து எந்த அசைவோ , சலனமோ இல்லை என்பது எங்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

தமிழக காங்கிரசின் சட்டமன்றத் தலைவர் டி.சுதர்சனம் எங்கள் பிரதிநிதிகளை அழைத் துப் பேசி இன்னும் 2 நாட்களில் சோனியா விடம் இருந்து உரிய பதிலைப் பெற்றுத் தருவ தாகக் கூறியதை ஏற்று 5 நாட்கள் வரை காத்தி ருந்தும் பதில் ஏதும் வரவில்லை.

தமிழகத்தின் மன சாட்சியாக நாங்கள் முன்னெடுத்த போராட்டத்தை சோனியா காந்தி அலட்சியப்படுத்தி விட் டார். ஈழத் தமிழர்கள் படு கொலைக்கு எதிராக இருக்கிறோம் என்று முதல் அமைச்சர் கருணாநிதி முழு அடைப்பு நடத்தினார். ஆனாலும் சோனியா காந்தி அதையே கேட்கவில்லை.

கலை உலகமும், பல்வேறு அமைப்புகளும் , அரசியல் கட்சிகளும் இப் பிரச்சினையில் களம் இறங்கியுள்ள நிலையில், நீதிபதி கிருஷ்ணய்யர் , மேதா பட்கர் , ஜெயலலிதா மற்றும் பல்வேறு அமைப்புகளின் வேண்டுகோளுக்கு இணங்கி நாங்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருகி றோம்.

ஈழத் தமிழின அழிவுக்கு எதிரான அனைத்து இயக்கங் களோடு இணைந்து பல்வேறு போராட்ட வடிவங்களில் பெண்களின் போராட்டத்தை நாடு தழுவிய அளவில் கொண்டு செல்ல முடிவு செய்துள்ளோம் என்றார். (6)

## இலங்கை பிரச்சினையில் மத்திய அரசின் நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஆபத்து

### அத்வானி குற்றச்சாட்டு

(ஹாசன்)

இலங்கைபிரச்சினையில்மத்தியஅரசின்நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஆபத்து அதிகரித்து விட்டது என்று, பா.ஜனதாவின் பிரதமர் வேட்பாளர் அத்வானி குற்றஞ் சாட்டியுள்ளார்.

கர்நாடகத்தில் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறும் ஹாசன் தொகுதியில் பா.ஜனதா சார்பில் தேர்தல்பிரசார பேரணி நேற்று முன்தினம் நடந்தது.

பேரணியை தொடங்கி வைத்து அவர் பேசுகையில்,

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசானது, வலுவான வெளிநாட்டு கொள்கையை வகுப்பதில் தோல்வி அடைந்து விட்டது. தவறான வெளிநாட்டு கொள்கைகளை கடைப்பிடித்தது. அண்டை நாடுகளுடன் இணக்கமான, சுமுகமான நட்புறவைக் கடைப்பிடிக்கவில்லை. இதன் காரணமாக உலக நாடுகள் இந்தயாவை மதிப்புக்குறைவாகப் பார்க்கின்றன.

உலகப் பொருளாதார நெருக்கடியில், இந்தியா தீவிரமான,சரியான வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடிப்பதன் மூலமே நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும்.

ஆனால் பிரதமர் மன் மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இதைச்செய்யாமல் மிக மோசமாக தவறிவிட்டது.

இலங்கை, வங்காள தேசம், பாகிஸ்தான், நேபாளம் போன்ற அண்டை நாடுகளுடன் நல்ல முறையில் நட்புறவு வைத்துக் கொள்ளவில்லை. இலங்கைத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஆபத்து அதிகரித்துள்ளது. இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை, பங்காள தேஷில் இருந்து ஊடுருவல் அதிகரிப்பு, பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளாலும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார். (6)

# பாதுகாப்பு வலயப் பகுதி மக்கள் பற்றிய அரசின் குழப்பமான புள்ளி விபரங்கள்

வரலாறு காணாத மனிதப் பேரழிவையும் அவலத்தையும் வன்னியில் தமிழினம் சந்தித்துக்கொண்டிருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பாதுகாப்பு வலயத்தில் வசித்து வந்த ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை கடந்த சில நாட்களில் பாதுகாப்பாகவெளியேற்றியிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது.

பொதுமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைளின் போது பாதுகாப்பு வலயத்துக்குள் மிகப் பெரியளவில் பொதுமக்களுக்கு அழிவுகள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. (கடந்த மூன்று மாதங்களில் வன்னியில் 6ஆயிரத்து 500 பொதுமக்கள் கொல்லப் பட்டதாகவும் 14 ஆயிரம் பேர் காயமுற்றதாகவும் ஐ.நா.வின் அறிக்கை ஒன்று வெளியாகியிருக்கிறது).

அரசாங்கம் இதை உலகின் மிகப் பெரிய பணயக்கைதிகள் மீட்பு நடவடிக்கை என்று தெரிவித்துள்ளது. அதேவேளை இந்த நடவடிக்கையின் போது முதல் நான்கு நாட்களிலும் கொல்லப்பட்ட மக்களின் தொகை 2ஆயிரத்தைத் தாண்டி விட்டதாகவும் 4ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமுற்றதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வன்னிப் பகுதி மோதல்கள் தொடர்பாகவும் அங்கு வாழும் மக்கள் தொடர்பாகவும் மோதல்களில் கொல்லப்படும், காயமடையும் பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் அரசாங்கம் வெளியிடும் தகவல்கள் எப்போதும் குழப்பம் நிறைந்தவையாகவே இருந்து வந்துள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாப்பு வலயத்துக்குள் வாழ்ந்த மக்கள் எத்தனை பேர் என்பதில் தொடங்கி இப்போது அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை வரைக்கும் நிறையவே முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் வாரம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய "ராஜபக்ஷ புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இலட்சக்கணக்கா்ன மக்கள் வாழ்கிறார்கள். என்பதெல்லாம் முழுப்பொய் அங்கு 89 ஆயிரம் பேர் மட்டுமே இருக்கிறார்கள்" என்று கூறியிருந்தார்.

அதேவேளை பெப்ரவரி 11ஆம் திகதி ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தகவல் வெளியிட்ட போது,

"முல்லைத்தீவில் இருந்த ஒரு இலட்சத்து 13ஆயிரத்து 832 மக்களில் 31 ஆயிரத்து 500 பேர் அங்கிருந்து வெளியேறி விட்டதாகக் கூறியிருந்தார்"

பாதுகாப்பு வலயத்தில் இருந்து மக்களை வெளியேற்றும் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட கடந்த 20ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற மக்களின் மொத்த எண்ணிக்கை 72ஆயிரத்து 571என்கிறது அரசாங்க அறிக்கை.

இதன்படி பாதுகாப்பு செயலாளர் கோத்த



பாய ராஜபக்ஷவின் கருத்து மற்றும் அமைச்சர் லக்மன் யாப்பா அபேவர்த்தனவின் அறிக்கை ஆகியன வெளியானதற்குப் பின்னர் கடந்த 20ஆம் திகதி வரைக்கும் அரச கட்டுப்பாட்டு பகுதிக்குச் சென்ற மக்களின் அண்ணளவான தொகை 40ஆயிரம் ஆகும்.

இந்நிலையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறிய 89ஆயிரம் பேரில் இருந்து 40 ஆயிரம் பேரைக் கழித்தால் பாதுகாப்பு வலயத்துக்குள் 50 ஆயிரம் பேர் தான் மிஞ்சியிருந்திருக்க வேண்டும்.

ஆனால் பாதுகாப்பு வலயத்தில் இருந்து ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேறியிருப்பதாக அரசாங்கம் இப்போது கூறுகிறது. புலிகள் பொய் சொல்கிறார்கள். அரச அதி காரிகளை மிரட்டித் தயாரித்த தவறான புள்ளி விவரங்களைக் காட்டி உலகத்தை ஏமாற்று கிறார்கள் என்று கூறிய அரசாங்கம் இப் போது எதைச் செய்திருக்கிறது?

பாதுகாப்பு வலயத்துக்குள் 70 ஆயிரம் பேருக்கு மேல் இல்லை என்று கூறி அரசாங்கம் அவ்வப்போது குறைந்தளவு உணவுப் பொருட்களையே கொண்டு செல்ல அனுமதித்து வந்தது.

இதன் காரணமாக அங்குள்ள மக்கள் மிகப் பெரிய அவலங்களைச் சந்திக்க நேரிட்டது. தமது வசதிக்காக குறைந்தளவு மக்களே அங்கிருப்பதாகக் கூறி மறைமுகமான பொருளாதார உணவுத் தடைகளைப் போட்ட அரசாங்கம் இப்போது உண்மையைச் சொல்ல வருவதேன்?

உலகின் மிகப்பெரிய பணயக்கைதிகள் மீட்பு நடவடிக்கையைத் தாம் மேற்கொண்டதாக வரலாற்றில் பதிவு செய்து கொள்வதற்காகவே அரசாங்கம் இந்த உண்மையைச் சொல்ல வருகிறது. ஆனால் அதில் கூட உண்மை இருக்கிறதா என்றால் அங்கேயும் குழப்பங் கள் தான் அதிகமாக உள்ளன.

பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை பற்றிய குழப்பமான அறிக்கைகள் பல வெளியாகி யிருக்கின்றன. நாளாந்த வாரியாக வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை பற்றி அரசாங்கத் தரப்பில் இருந்தே மூன்று வித்தியாசமான புள்ளிவிபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த 20ஆம் திகதி வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை 42 ஆயிரத்து 316 என்கிறது பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையத்தின் அறிக்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார அந்தத் தொகை 41 ஆயிரத்து 75 என்று கடந்த 22ஆம் திகதிநடந்த செய்தியாளர்மாநாட்டில் கூறியிருந்தார்.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சோ 39 ஆயிரத்து 845 பேர் வெளி யேற்றப் பட்டதாக அறிக்கையிட்டிரூக்கிறது.

21ஆம் திகதி வெளியேற்றப்பட்ட மக்களின் எண்ணிக்கை பற்றிய குழப்பம் மிகப் பெரியது ஊடக மத்திய நிலையம் 40 ஆயிரத்து 704 பேர் என்று கூறியிருக்கும் நிலையில் பிரிகேடியர் உதய நாணயக் கார 36 ஆயிரத்து 718 பேர் என்று கூறியிருந்தார். ஆனால் பாதுகாப்பு அமைச் சோ26 ஆயிரத்து 580 பேர் வெளியேற்றப்பட்டனர் என்கிறது.

22 ஆம் திகதி 20 ஆயிரத்து 123 பேர் வெளியேற்றப்பட்டதாக ஊடக மத்திய நிலையம் கூறியிருக்கின்ற நிலையில் , பாதுகாப்பு அமைச்சு 36 ஆயிரத்து 106 பேர் வெளியேற்றப்பட்டதாககூறியிருந்தது.

பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தினது தகவல் படி முதல் மூன்று நாட்களிலும் வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை 1இலட்சத்து 3ஆயிரத்து143 ஆகும். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் தகவல் படி இந்தக் காலத்தில் வெளியேற்றப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1 இலட்சத்து 2 ஆயிரத்து 531 பேர் தான். 612 பேரின் கணக்கு இதில் வித்தியாசப் பட்டது.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சு 23 ஆம் திகதி மேலும் 3 ஆயிரத்து 499 பேர் வெளியேற்றப்பட்டதாகக் கூறி மொத்தம் நான்கு நாட்களிலும் வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை 1 இலட்சத்து 6 ஆயிரத்து 30 பேர் என்று கூறியுள்ளது.

ஆனால் ஊடக மத்திய நிலையமோ 2 ஆயிரத்து 934 பேர் தான் 23 ஆம் திகதி வெளியேற்றப்பட்டதாகக் கூறியுள்ளதுடன் நான்கு நாட்களிலும் 1 இலட்சத்து 6 ஆயிரத்து 77 பேர் வெளியேற்றப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளது.

ஒரே அரசாங்கத்தின் ஒரே பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருக்கின்ற தரப்புகளின் அறிக்கைகளில் காணப்படும் குழப்பமான இந்த புள்ளி விபரங்கள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. ஆனால் இது பற்றி எவருமே கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் பாதுகாப்பு வலயத்துக்குள் இன்னமும் வாழும் மக்களின் தொகை எவ்வளவு என்று கேள்வி மீண்டும் எழுகிறது.

பாதுகாப்புத் தரப்போடு தொடர்புடைய சில வட்டாரங்கள் 50 ஆயிரம் பேர் இன்னமும் அப் பகுதியில் வசிப்பதாகக் கூறியிருப்பினும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா 15 ஆயிரம் பேர் தான் இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

கடந்த மாதம் அரசாங்கம் 70 ஆயிரம் பேர் தான் பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதாகக் கூறியது. ஆனால் கடந்த பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் வெளியேற்றப்பட்ட மக்களின் தொகையே 1 இலட்சத்து 45 ஆயிரம் பேருக்கு மேல் என்பதை அரசாங்கம் இப்போது உறுதி செய்திருக்கிறது. இதை விட குறைந்தது 15 ஆயிரம் பேர் பாதுகாப்பு வலயத்துக் குள் இன்னமும் இருப்பதாகவும் கூறுகிறது.

இந்தத் தகவல்களின் படி குறைந்தது ஒன்றரை இலட்சம் மக்கள் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்திருப்பதை அரசாங்கமே உறுதி செய்கிறது. ஆனால் அவர்களுக்கு அனுப்பப்பட்ட உணவும் மருந்தும் பாதியளவானோருக்கே அனுப்பப்பட்டன.

இந்த நிலையில பாதுகாப்பு வலயத் துக்குள் உணவுத் தட்டுப்பாடே இல்லை என்றும் அதெல்லாம் வெறும் பிரசாரம் என்றும் அமைச்சர்கள் கூறியிருந்தனர்.

அரசாங்கம் பாதுகாப்பு வலயத்துக்குள் வாழ்ந்த, வாழும் மக்கள் பற்றிய பல உண்மைகளை மறைத்து வந்தது. இப்போது அதன் வாயாலேயே அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளன. போருக்குள் வாழும் மக்களின் அவலங்களையும் அவர்களுக்கு ஏற்பட்டு வந்த இழப் புகளையும் மறைத்து மனிதாபி மான நடவடிக்கையில் வெற்றி பெற்றதாக அரசாங்கம் காட்டிக்கொண்டது.

ஆனால் இன்று அரசாங்கம் தனது முன்னைய அறிக்கைகளையே நிராகரிக்க வேண்டிய நிலை வந்திருக்கிறது.

நகுலன்

**குறைந்தது ஒன்றரை இலட்சம் மக்கள் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்திருப்பதை அரசாங்கமே உறுதி செய்கிறது. ஆனால் அவர்களுக்கு அனுப்பப்பட்ட உணவும் மருந்தும் பாதியளவானோருக்கே அனுப்பப்பட்டன.**


## 31ஆம் நாள் நினைவுப் பாவும் நன்றி நவிலலும்



தோற்றம் 05 10 1946

மறைவு 28 03 2009

அமரர்

### சந்திரசேகரம் குமரகுரு

அன்பின் உறைவிடமாய் பாரினிலே வாழ்ந்து
அன்பால் எமைஅரவணைத்த குமரகுரு
சர்வதாரி ஆண்டு பங்குனி திங்கள் அன்று
பரன் அடி சேர்ந்தார் நித்திய வாழ்வு பெறவே

எங்கள் குடும்பத் தலைவர் குமரகுரு நோயுற்று இருந்த போதும் பின்னரும் ஜெபத்தினாலும் ஆறுதலாலும் அரவணைத்த (A.O.G) சபை போதகர்களுக்கும் விசுவாசிகளுக்கும் எங்கள் நன்றியை தெரிவிப்பதுடன் எங்கள் குடும்பத் தலைவர் குமரகுரு அவர்கள் நோயுற்று இருந்த போது அவருக்கு சிகிச்சையும் ஆறுதலும் அளித்த ஆனைப்பந்தி சுகந்தா வைத்தியசாலை நிர்வாகி, வைத்தியர்கள் , ஊழியர்கள் யாவருக்கும் ஆனைப்பந்தி மெ.மி. பாடசாலை சமூகத்திற்கும் மற்றும் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமக்கு எல்லா வழிகளிலும் தோள் கொடுத்து உதவிய சகல நண்பர்கள் , உறவினர்கள் அனைவருக்கும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனபு உள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

288,(240)நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி சூரியாவும்
அன்னாரின் சகோதரர்களும்

(இ-12)


## இலங்கைக்கு உதவி தொடர்பில் சீனாவுக்கும் இந்தியாவிற்கும் இடையில் முறுகல்

இலங்கைக்கு உதவி புரிவது தொடர்பில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தை திருப்திப் படுத்தி நன்மதிப்பை பெறும் நோக்கிலேயே சீனா இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருவதாக சீன அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இந்து சமுத்திரத்தின் வர்த்தக கேந்திர நிலையமாக காணப்படுவதால் சீனாவின் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் இலங்கையை இதன் மூலம் பயன்படுத்திக்கொள்ள சீனா முயல்வதாக இந்தியா கருதுகிறது.

எறிகணைகள் உள்ளிட்ட பாரிய அளவிலான ஆயுதங்களை சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளமை வெளிப்படையான உண்மை.

கடந்த வருடத்திலும் இடைக்கிடையிலும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நிதியினை சீனா வழங்கி இலங்கைக்கு நிதி வழங்கும் மிக முக்கிய நாடாக பரிணமிக்கிறது.

ஜியன் 7 தாக்குதல் ஏவுகணைகள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள், ஜே வை 11 முப்பரிமான விமான கண்காணிப்பு ராடர் என பல்வேறு போரியல் உபகரணங்களை சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அமெரிக்கா இலங்கைக்கான தமது நேரடி உதவிகளை இடை நிறுத்திக்கொண்டதன் பின்னர் அந்த பணியை சீனா மேற்கொண்டு வருவதாக புள்ளி விபர நுட்பவியலாளர் பரஹ்மா செல்லானி தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி சீனா, பாகிஸ்தான் அரசாங்கத்தையும் இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்க வகை செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தானின் பொருளாதாரம் ஸ்திரமற்று இருப்பினும் இலங்கைக்கு சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் இராணுவ உதவிகளை வழங்கியுள்ளது. இலங்கை இந்து சமுத்திரத்தின் முக்கிய கேந்திர நிலையமாக இருப்பதால் இலங்கை ஊடாக பொருள் மற்றும் எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட சீனா திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாகவே மஹிந்தவின் சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் பாரிய நவீனத்துவத்துடன் கூடிய துறைமுகம் ஒன்றினையும் நிர்மாணிக்க சீனா ஒத்துழைத்துள்ளது.

இதன் மூலம் சீனா இந்தியா வின் பசுபிக் நாடுகளுடனான தொடர்பாடல் தகவல்களை கண்காணிக்கக் கூடும் என இந்தியா அஞ்சுகிறது. இதன் காரணமாக இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த செய்திகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (6)

தர்மத்தாலும் கருணையாலும் எய்தப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்கவல்லது. இதனை அறியாதார் உலக சரித்திரத்தையும் இயற்கையின் விதியையும் அறியாதவர் ஆவார். – *பாரதியார்*

வலம்புரி

# இலங்கை அரசுக்கான அமெரிக்காவின் எச்சரிக்கை

இலங்கை இனவிவகாரம் –வன்னிப் போர்– தமிழ் மக்களின் அவலம் என்ற நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக ஐ.நா. அமைப்பும் அமெரிக்காவும் இலங்கை விடயத்தில் தீவிரமாக அவதானித்து வருவதைக் காண முடிகிறது.

இலங்கை அரசு உடனடியாக யுத்தத்தை நிறுத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் வெள்ளை மாளிகை விடுத்துள்ள அறிவிப்பை சாதாரணமாக எவரும் கருதி விட முடியாது.

வெள்ளை மாளிகை விடுத்த அறிக்கை யுத்தத்தை நிறுத்த இலங்கை அரசு தவறுமாக இருந்தால், அது இலங்கையின் ஒற்றுமைக்கு ஆபத்தாக அமையும் என்ற வாசகம் ஆழ்ந்து நோக்குதற்குரியதாகும்.

யுத்தத்தை நடத்துவதன் மூலமே இலங்கையின் இறையாண்மையை பாதுகாக்க முடியும் என இலங்கை அரசு கூறிவருகிறது.

யுத்த நிறுத்தத்தை செய்து படுகுழியில் விழுவதற்கு நாங்கள் தயாரில்லை என்பது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் கருத்து.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இன்னமும் ஒரு சில மணித்தியாலங்களே இருப்பதாக ஜனாதிபதி கூறுகிறார்.

நிலைமை இதுவாக இருக்கும் போது, உடனடியாக யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனவும் இல்லையேல் அது இலங்கையின் ஒற்றுமைக்கு ஆபத்தாக அமையும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி கூறியிருப்பது இலங்கை அரசுக்கு பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இன்னமும் ஒரு சில மணித்தியாலங்களே இருப்பதாக அரசு கூறும்போது, யுத்த நிறுத்தம் செய்யாவிட்டால் இலங்கையின் ஒற்றுமைக்கு ஆபத்து வரும் என அமெரிக்கா நிறுத்திட்டமாக கூறியிருப்பதில் இருந்து அந்த ஆபத்து யாரால் என்ற கேள்வி மேலெழுகிறது.

இங்குதான் இலங்கை அரசும் இந்திய மத்திய அரசும் குழம்பிப் போயுள்ளன.

அதாவது, இலங்கையில் முப்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெறும் போராட்டம்–இன்னமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத இழுபறி நிலை – தற்போது வன்னியில் இடம்பெறும் கொடூர யுத்தம். இந்த நெடுந் துயரில் அமெரிக்கா எச்சரிக்கை செய்திருப்பது இலங்கைக்கான ஆபத்து அமெரிக்காவிடமிருந்து வரலாம் என்ற அனுமானத்தை நெருங்க வைக்கிறது.

# ஐ.நாவின் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசு தெளிவுபடுத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் முதல் 6 ஆயிரத்து 500 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 13 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் கடந்த ஒரு வாரத்திற்குள்ளாக ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் தெளிவுபடுத்த வேண் டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அப்பாவிப் பொது மக்களை பாதுகாக்கும் பொறுப்பில் இருந்து அரசாங்கம் தப்ப முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வாக்குச் சாவடியில் நேற்று முன்தினம் வாக்களித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பிரச்சினை தொடர்பாக நாம் எமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளோம் இதன் பின்னரும் இன்னுமொரு கருத்தை முன் வைக்கவுள்ளோம் குறிப்பாக தற்போது யுத்தம் முடிவடைந்ததும் சமாதானத்தின் பக்கம் நாம் எமது அவதானத்தைச் செலுத்த வேண்டும் எவ்வாறு நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பது வீழ்ச்சி கண்டுள்ள பொருளாதாரத்தை எங்கனம் தூக்கி நிறுத்துவது எனப் பார்க்க வேண்டும். இந்த யுத்தம் முடிவிற்கு வருவதன் காரணமாக ஊடகங்களுக்கு எதிரான யுத்தத்தையும்



அரசாங்கம் முடிவிற்கு கொண்டு வரும் என நான் எதிர் பார்க்கின்றேன் இல்லையென்றால் அரசாங்கத்தின் குறைபாடுகளை மறைப்பதற்காக ஊடகங்கள் மீது மேலும் அழுத்தங்கள் அதிகரிக்கக்கூடும் அச்சுறுத்தல்களும் ஏற்படக்கூடும்.

இதன் போது ஊடகவியலாளர் ஒருவர் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப் பகுதியில் வன்னியில் 6ஆயிரத்து500 இற்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை விடுத்துள்ளது உங்களது கருத்தென்ன என வினவிய போது இது தொடர்பில் அரசாங்கம் நாடாளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதுடன் நாட்டிற்கு இது தொடர்பில் அறியத் தரும் என எதிர்பார்த்தேன்.

அதனைச் செய்யவில்லை அது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பை மீறிய செயற்பாடாகும் இந்த நாட்டு மக்களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் அறியத்தரவில்லை என்றார். (6)

# பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் குறுகிய பிரதேசத்தில் தங்கவைப்பு

## யு.என்.எச்.சி.ஆர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வவுனியா மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக யு.என்.எச்.சி.ஆர்.சுட்டிக் காட்டியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் குறுகிய பிரதேசத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் மக்கள் பெரும் அவஸ்தைகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் இடப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக யு.என்.எச்.சி.ஆர். குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக தங்குமிடவசதிகள் இன்மையினால் வயோதிபர் முதல் சிறுவர்கள் வரையில் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே உடனடியாக இடம்பெயர் மக்களை உரிய வகையில் தங்க வைப்பதற்கு தேவையான இடங்களை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நியமனங்களுக்கு அமைய ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் இடைத்தங்கல் முகாம்களின் தரம் உயர்த்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு சுத்தமான குடிநீர் சுகாதார வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)

# வன்னி நிலை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் விவாதிப்பதற்கு பல நாடுகள் மீண்டும் முயற்சி

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதியில் கடந்த 3 மாத காலப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களில் 6ஆயிரத்து 432 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதையடுத்து, இந்தப் பிரச்சினை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உத்தியோகபூர்வமாக நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும் என பலமான அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் அமைப்புக்கள் பலவற்றுடன், பாதுகாப்புச் சபை உறுப்புநாடுகள் பலவும் இது தொடர்பாக அழுத்தம் கொடுப்பதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் பாதுகாப்புச் சபையின் கூட்டத் தொடரில் இந்தப் பிரச்சினையையும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கி விடுவதற்கான தீவிர முயற்சியில் இவை இறங்கியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் வடபகுதியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினை மேலும் மோசமடையுமாக இருந்தால் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில்; அது சேர்த்துக் கொள்ளப்படக் கூடிய ஆபத்து இருப்பதாக அமெரிக்காவில் உள்ள இலங்கை இராஜதந்திரி ஒருவர் கொழும்புக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பலநாடுகள்இந்தப் பிரச்சினை தொடர்பாக விவாதிக்க விரும்புவதாகவும் அவர்சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

பாதுகாப்புச் சபையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிலைமையைப் பொறுத்த வரையில் அடுத்துவரும் இரண்டு வாரங்களும் முக்கியமானவையாகும் எனக் குறிப்பிடும் அவர், அதிக ளவுக்கு பொதுமக்கள் இழப்புக்கள் பதிவுசெய்யப்பட்டிருப் பதால் அமெரிக்கா,பிரித்தானியா, பிரான்ஸ், மெக்சிக் கோ,ஒஸ்ரியா,கோஸ்ரோரிக்கா, குரோசியா ஆகியநாடுகள் இலங்கை நிலைமை தொடர்பாக தாம்விவாதிக்கவிரும்புவ தாகவும், அதனை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும்கேட்டுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்புச் சபையில் கடந்த புதன்கிழமை இலங்கை விவகாரம் உத்தயோகப் பற்றற்ற முறையில் ஆராயப்பட்ட போது, பெரும்பாலான நாடுகள் அங்கு உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினைதொடர்பாக தமது கவலையை வெளிப் படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி தொண்டு



ஒன்றும் செய்யாமல் நீங்கள் வாழ்வதைக் காண என் மனம் மிக மிக வருந்துகின்றது. முயற்சியில் ஈடுபடுங்கள், வேலை செய்யுங்கள், தாமதம் வேண்டாம்– மரண காலம் நாளுக்கு நாள் நெருங்கி வருகிறது! பின்னாளில் ஒவ்வொன்றும் உரிய காலத்தில் நடக்கும் என்றெண்ணிச் சோம்பலில் நாளைக் கழிக்காதீர்கள்! அந்த வழியால் ஒன்றும் நடைபெறாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

ஆற்றலும் அது போன்ற பிறவும் தாமே வரும் .முயற்சியில் ஈடுபடு ; அதன் பயனாக, ஏராளமான ஆற்றல் உன்னிடம் வருவதைக் காண்பாய் அது உன்னால் தாங்க முடியாத அளவுடையது என்பதை உணர்வாய் பிறருக்காகச் செய்யும் மிகச் சிறு முயற்சியும் உள்ளிருக்கும் சக்தியை எழுப்புகிறது. பிறர்க்காக மிகச் சிறு நன்மையை நினைப்பதும் கூடச் சிங்கத்தின் பலத்தை நெஞ்சிற்குள் ஊட்டும். உங்கள் அனைவர் மீதும் எவ்வளவு அன்பு எனக்குப் பெருகின்றது; ஆனால் நீங்கள் அனைவரும் பிறர்க்கென உழைத்துக் கொண்டே இறப்பதை நான் விரும்புகிறேன். அது எனக்கு மிக மகிழ்ச்சியைத் தரும்.

# வவுனியா வைத்தியசாலையில் ஒருநாளில் 71 சத்திரசிகிச்சைகள்

## 45 பேர் தங்கக்கூடிய வாட்டில் 320 பேர் அனுமதி

(வவுனியா)

வவுனியா பொது மருத்துவமனையில் பெரும் எண்ணிக்கையிலான காயமடைந்த பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெடிசின் சான்ஸ் புறொன்டிரஸ் (எம்.எஸ்.எஃப்) நிறுவன பிரிட்டிஷ் சத்திரசிகிச்சையாளர் போல் மக்மாஸ்டர்ஸ் குழுவினர் தற்போது வவுனியா பொது மருத்துவமனையில் காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வருகின்றனர்.

ஒரே நாளில் அதாவது 24 மணித்தியாலத்தில் 71 சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய மருத்துவ மேற்பார்வை இல்லாமையால் நோயாளர்கள் இறக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய மருத்துவ கண்காணிப்பு இல்லாமல் உள்ளதாக சத்திர சிகிச்சையாளர் மக்மாஸ்டஸ் தெரிவித்தார்.

ஏழு அல்லது எட்டு வயதுடைய சிறுமி காலில் பெரும் காயங்களுடன் காணப்பட்டார் எனவும் இச் சிறுமி தனது காயம் அடைந்த மூத்த சகோதரியுடன் ஒரே கட்டிலில் வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளார் எனவும் சத்திர சிகிச்சையாளர் மக்மாஸ்டர்ஸ் தெரிவித்தார்.

இச் சகோதரிகளின் தாய் யுத்தத்தில் இறந்துவிட்டார். இச் சகோதரிகளின் தந்தை வைத்தியசாலையில் அவசர சேவைப் பிரிவில் உள்ளார்.45 நோயாளிகள் தங்கக்கூடிய மருத்துவமனைப் பிரிவில் 320 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மக்மாஸ்டர்ஸ் தெரிவித்தார். மருத்துவமனையில் நோயாளிகள் குவிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனைவருக்கும் வைத்திய சேவை அளிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாதியருக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒருநாளுக்கு 20 மணிநேரம் தாதியர் வேலை செய்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் நெருக்கடியான சூழலில் அம்மை நோய் பரவும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் தற்காலிக முகாம்களில் தங்வைக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ குழுக்கள் கொழும்பிலிருந்து சுழற்சி முறையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சைச் சேர்ந்த எஷவர கோட்ட ஹொட தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் காயம் அடைந்து வரும் பொதுமக்களுக்கு எம்மால் இயன்ற சிறந்த மருத்துவ சேவையை வழங்க உள்ளதாக கோட்ட ஹொட மேலும் தெரிவித்தார். (6)

## மெனிக்பாம் பகுதியில் தற்காலிகக் கூடாரங்கள் அமைக்கும் பணிகள்

வவுனியாவிலுள்ள மெனிக்பாம் பகுதியியில் மேலதிக தற்காலிக கூடாரங்கள் மற்றும் உள்ளக வசதிகளை மேம்படுத்தும் பணிகள் அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மற்றும்புதுமாத்தளன் பகுதிகளில் பாதுகாப்பு வலயங்களை அண்மித்து படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அங்கிருந்து பெருமளவிலானோர் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் இடைத்தங்கல் முகாம்களில் இடப் பற்றாக்குறைகள் மற்றும் உள்ளக வசதிகள் போதுமானதாக இல்லாதிருப்பதால் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் மக்களை தங்கவைப்பதற்கான மூன்றாம் வலயம் அமைக்கும் பணிகள் அரசசார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் தங்குவதற்கான தற்காலிக கூடாரங்கள் அடிப்படை, சுகாதார வசதிகள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் பல துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (6)

# இடப்பற்றாக்குறையினால் சடலங்களை பாதுகாத்து வைப்பதில் சிரமம்

(வவுனியா)

வைத்தியசாலைக்குத் தொடர்ச்சியாக இறந்தவர்களின் சடலங்கள் வந்துகொண்டிருப்பதாகவும், அங்கு நிலவுகின்ற இடப்பற்றாக்குறை காரணமாக சடலங்களை உறவினர்கள் அடையாளம் கண்டு, அவற்றைப் பொறுப்பேற்பதற்காக வரும் வரையில் வைத்துப் பராமரிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்து வருபவர்களுடன் கொண்டு வரப்படுகின்ற சடலங்கள், இவ்வாறு வரும் போது காயமடைந்து சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழப்போர்,ஓமந்தைப் பகுதிக்கு வந்துள்ள மக்கள் மத்தியில் பல்வேறு காரணங்களினால் உயிரிழப்பவர்கள், இடைத்தங்கல் நிவாரண முகாம்களில் வயோதிபம் மற்றும் சுகவீனம் காரணமாக உயிரிழக்கின்றவர்கள் போன்றோரின் சடலங்களே வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

தற்போது 30 சடலங்கள் வரையில் இவ்வாறு உறவினர்களின் வருகைக்காக வைக்கப்பட்டிருப்பதாகவும் கடந்த வியாழக்கிழமை இரண்டாவது தொகுதியாக 28 சடலங்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா சவச்சாலையில் இடப்பற்றாக்குறை நிலவுவதுடன், அங்கு ஒரேயொரு குளிரூட்டியே செயற்படுவதாகவும், மாதக்கணக்கில் பழுதடைந்திருந்த மற்றுமொரு குளிரூட்டி திருத்தப்பட்டுள்ள போதிலும்,அதில் உள்ள இடவசதிக்கேற்ற அளவில் சடலங்களை வைக்கமுடியாதிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (6)

# இடம்பெயர்ந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க கிழக்கில் இருந்து டாக்டர்கள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் இருந்து வைத்தியர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் எம். தேவராஜன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் தகவல் தருகையில் மேலும் கூறியதாவது,

கல்முனை மாவட்டத்திலிருந்து 4 வைத்தியர்களும் 4 தாதியர்களும் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் அஜீவத் தலைமையிலான குழுவினர் இதில் அடங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை மாவட்ட வைத்திய அதிகாரி எம். அச்சுதன் தலைமையில் 3 வைத்தியர்களும் 4 தாதியரும் அனுப்பப்பட்டவுள்ளனர்.

புல்மோட்டையில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கும் உதவுவதற்காக திருகோணமலையில் இருநது 3 வைத்தியர்களும் 4 தாதியர்களும் அனுப்பப்பட்டுள்ளனர். குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரியும் அங்கு மேலதிக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்றார். (6)

# முல்லைத்தீவில் மோதல் நடைபெறும் பிரதேசத்தில் இன்னமும் ஒன்றரை இலட்சம் மக்கள் உள்ளனர்

## டாக்டர் வரதராஜா தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவில் மோதல் நடைபெறும் பிரதேசத்தில் இன்னமும் ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருப்பதாகவும் அங்கு பாரிய உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ந.வரதராஜா தெரிவித்தார்.

குழந்தைகளின் பால்மா வகைகளுக்கும் மருந்து வகைகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவித்த டாக்டர் வரதராஜா எறிகணைத் தாக்குதல்களினால் காயமடைபவர்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய மருந்துகள் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

அம்பலவன்பொக்கணை, வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய யுத்த சூனிய வலயப் பகுதிகள் மக்கள் தங்குவதற்கு போதிய வசதிகள் இன்றியும் சுத்தமான குடிநீர் இல்லாமையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

டாக்டர் வரதராஜா மேலும் தெரிவித்ததாவது,

முள்ளியவளையில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே காயமடைந்து வருபவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பெரும் எண்ணிக்கையிலானோர் காயமடைந்த நிலையில் இருக்கும் இவ்வேளை நேற்று முன்தினம் எறிகணை வீச்சினால் காயமடைந்த இருநூறு பேர் கொண்டு வரப்பட்டனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்க மருந் துகள் இல்லை.

இது குறித்து அனர்த்த நிவாரண மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, திங்கட்கிழமை (இன்று) முப்பது மெட்ரிக் தொன் உணவுப்பொருட்கள் கப்பலில் அனுப்பி வைக்கப்பட உள்ளது என்றார். (6)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க பிரான்ஸ் முன்வருகை

(கொழும்பு)

வடக்கே மோதல் இடம்பெறும் பகுதியிலிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ள மக்களுக்கு வைத்திய உதவிகளை வழங்க பிரான்ஸ் முன்வந்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவ சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இந்த உதவியை வழங்க பிரான்ஸ் முன்வந்துள்ளது.

இதன்பிரகாரம் வவுனியாவில் 100 படுக்கைகளைக் கொண்ட வெளிப்புற மருத்துவமனையொன்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கும்,அங்கு சேவையாற்ற 75 பேர் கொண்ட மருத்துவர் குழுவொன்றை அனுப்பி வைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (6)

# புல்மோட்டையில் நலன்புரி நிலையம் அமைத்து 5 ஆயிரம் குடும்பங்களை தங்கவைக்க ஏற்பாடு

(கொழும்பு)

முல்லைத் தீவில் இருந்து வரும் மக்களில் சுமார் ஐயாயிரம் குடும்பங்களை திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டைப் பகுதியில் நலன்புரி நிலையம் அமைத்து தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் இத் தகவலை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதுடன் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

முல்லைத் தீவில் இருந்து படகுகள் மூலம் தாமாக வந்து சேர்ந்து ஆயிரம் குடும்பங்கள் ஏற்கனவே புல்மோட்டை சிங்கள மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.


இவர்களுடன் மேலும் நான்காயிரம் குடும்பங்கள் வவுனியாவில் இருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இவர்களையும் தற்காலிகமாக இப் பாடசாலையில் தங்க வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இவ்வாறு மே மாதம் முதலாம் திகதி வரை மட்டுமே பாடசாலையில் தங்கவைக்கப்படுவர். பின்னர் இதற்காக அமைக்கப்படும் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. (6)

# க.பொ.த. உயர்தரம் 3A, 2AB பெற்ற யாழ்.கல்வி வலய பாடசாலை மாணவர்களை இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய கௌரவிப்பு விழா நிகழ்வு




இலங்கை வங்கியின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் தலைமையுரை ஆற்றுவதையும், யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆசியுரை வழங்குவதையும், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்புரையாற்றுவதையும், வலம்புரியின் நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம், இலங்கை வங்கியின் முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்குவதையும், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.சின்னத்தம்பி விரிவுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.




இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளை முகாமையாளர் ஆனந்தநடேசன் நன்றியுரை ஆற்றுவதையும், யாழ்.கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.



கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்.

*குறிப்பு:* மாணவர் கௌரவிப்பு நிகழ்வு தொடர்பான படங்கள் தொடர்ந்து வெளிவரும்.

## டில்சான் சிறப்பான அரைச்சதம்; டில்லி டேர் டேவில்ஸ் வெற்றி




(போர்ட் எலிசபெர்த்)

திலகரட்ண டில்சானின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் 14ஆவது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் பீற்றர்சன் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் கெவின் பீற்றர்சன் 25 பந்துகளில் (2 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் மார்க் பௌச்சர் 28 பந்துகளில் (2 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் றெய்லர் 31, ஹோலி 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நெகரா 2 விக்கெட்டுக்களையும் நான்னேஸ், சங்க்வான்,மிஷ்ரா மற்றும் டானியல் விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 150 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி டில்சானின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களைமாத்திரம் இழந்து 150 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் திலகரட்ண டில்சான் 47 பந்துகளில் (5 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 67 ஓட்டங்களையும் மான்ஹஸ் 13 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் குவித்ததுடன் டி வில்லியர்ஸ் 21,காம்பீர் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பங்காஜ் சிங் 2 விக்கெட்டுக்களையும் அப்பன்னா, அக்கில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன்மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றியை பெற்றதுடன் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தனது 5ஆவது போட்டியில் 4ஆவது தோல்வியை சந்தித்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக டில்லி டேர் டேவில்ஸ் அணியின் டில்சான் தெரிவானார்.

## சங்கக்கார பொறுப்பான அரைச்சதம்; கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் வெற்றி

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் நேற்று கேப்டவுனில் நடைபெற்ற லீக் சுற்றின் 15ஆவது போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் யுவராஜ்சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின்பஞ்ஜாப் அணியும்மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குமார் சங்கக்கார 51 பந்துகளில் (7 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 60 ஓட்டங்களையும். இர்பான் பதான் 33 பந்துகளில் (2 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 39 ஓட்டங்களையும் குவித்தனர்.பந்துவீச்சில் காம்ரான் கான், முனாப் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.பதிலுக்கு 20 ஓவர்களில் 140 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இராஜஸ்தான் றோயல்ஸ் அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைமாத்திரம் எடுத்து 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஜடேஜா 37 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஷேன் வோர்ன் ஆட்டமிழக்காமல் 33 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 34 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அப்துல்லா 4 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான், பியூஸ் சாவ்லா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய 4ஆவது போட்டியில் 2ஆவது வெற்றியை பெற்றதுடன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 4 ஆவது போட்டியில் 2ஆவது தோல்வியைச் சந்தித்தது.

நிர்வாகத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## மேல்மாகாண சபைத்...

30 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 56 ஆயிரத்து 384 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும் சிறிலகா முஸ்லிம் காங்கிரஸ் 49 ஆயிரத்து 388 வாக்குகளைப் பெற்று இரு ஆசனங்களையும், ஜன நாயக ஐக்கிய முன்னணி 11 ஆயிரத்து 970 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

மேலும் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 530370 வாக்குகளைப் பெற்று 25 ஆசனங்களுடன் வெற்றியீட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 327571 வாக்குகளுடன் 15 ஆசனங்களையும்,மக்கள் விடுதலை முன்னணி 21787 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 18978 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும், ஜனநாயக ஐக்கிய முன்னணி 11970 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேல் மாகாண சபை தேர்தல்களில் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் 351215 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுள்ளது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி 124 426 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி 13106 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 624530 வாக்குகளைப் பெற்று 27 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 236530 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி 21491 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 18014 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன. (எ-3,5)

## தமிழீழ விடுதலைப்...

சார்பில் அமெரிக்க காங்கிரஸ், செய்ம்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுடன் மூன்றாவது கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளது.

பத்து நாட்களுக்குள் இது மூன்றாவது கலந்துரையாடலாக அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமெனத் தாம் கோரிக்கை விடுப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பேச்சாளர் றொபேர்ட் வூட் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு மூன்றாவது தரப்பிடம் சரணடைய வேண்டுமென நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

அதேநேரம் விடுதலைப் புலிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதுடன் மீள்குடியேற்றம் தொடர்பான தெளிவான திட்டங்களைத் தயாரித்துக்கொண்டு அரசியல் பேச்சுவார்த்தைக்கான பாதையை இலங்கை அரசாங்கம் திறக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கிறோம் என்றார் அவர்.

மோதல்கள் நடைபெறும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேறியிருப்பதை தாம் வரவேற்பதுடன் மேலும் சிக்கியிருக்கும் மக்கள் வெளியேற்றப்பட வேண்டும் எனவும் இணைத்தலைமை நாடுகள் தமது அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளன. (எ-5)

## திருகோண...

வாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நொச்சிகுளம் சமாதான சபையின் தலைவர் கோணேஸ்வரன் (வயது 48) மற்றும் சேகர் (வயது 60), அமீர் (வயது 32) ஆகிய மூன்று பேரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதேவேளை 70 வயதுடைய இராசமணி என்பவர் சாந்திபுரத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக கந்தளாய் காவல்துறை அத்தியட்சகரிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் முறையிட்டுள்ளார். (எ-1)

## பாதுகாப்பு வலயம் மீது...

வெளியாகியுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

போர் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமெனவும் மக்கள் பாதுகாப்பு வலயத்தின் மீதான எறிகணைத் தாக்குதல்களை படையினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் ஐ.நா. சபை, ஜி-8 நாடுகளின் அமைப்பு,வெள்ளை மாளிகை, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்புகள் பலவும் கோரிக்கை விடுத்துவரும் நிலையில், அவை அனைத்தையும் புறக்கணித்திருக்கும் அரசு மற்றொரு பாரிய இராணுவத் தாக்குதலுக்கான தயாரிப்புக்களை மேற்கொண்டுள்ளது என்றும் பாரிய படை நடவடிக்கைக்கான முன்னோடியாக முன்னணிக் காவலரண்களை நோக்கி பெருமளவு படையினரும்,ஆயுத தளபாடங்களும் நகர்த்தப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனைவிட தொடர்ச்சியாக செறிவான எறிகணைத் தாக்குதல்களையும், பல்குழல் வெடிகணைத் தாக்குதல்களையும் படையினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை முழுவதும் மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நேற்று இரவு அல்லது இன்று அதிகாலையில் பாரிய படை நகர்வுக்கான தயாரிப்புக்கள் முழு அளவில் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வன்னி பாதுகாப்பு வலயப் பகுதியில் சிக்கியுள்ள மக்களை மோதல்களிலிருந்து காப்பாற்றுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு அவ்வமைப்பு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (எ-3,5)

## பொத்து...

முருகன் ஆலயத்திற்கு அண்மித்த பகுதியில் இவர்கள் தங்கியிருந்த மீன்வாடிகளும் சேதமாக்கப்பட்டுள்ளதோடு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4 வள்ளங்களுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பொத்துவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ-5)

## பாடசாலை...

நடவடிக்கைகள் ஆரம்பிப்பதை இன்று 27 ஆம் திகதி வரை வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஒத்திவைத்தார்.

இந்நிலையில் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்.குடாநாட்டுக்கு அண்மைய சில நாட்களாக மக்கள் வராத நிலையில் முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் இன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என யாழ். மாவட்டத்தின் ஐந்து வலயக் கல்விப்பணிப்பாளர்களும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மாற்று ஒழுங்கமைப்பின் பிரகாரம் நடைபெறும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-5)

## வன்னியில்...

குண்டுத்தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

முற்பகல் 11 மணிவரை வான்படை 38 குண்டுகளை வீசியுள்ளது.மிக், கிபீர் மற்றும் எப் -7 ரக விமானங்கள் மாறி மாறி வந்து குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-5)

## வெள்ள...

ஒரு மணியளவில் முல்லைத்தீவு வெள்ளமுள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த கடற்புலிகளின் படகுத் தொடரணியொன்றை அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவதானித்துள்ளனர்.

இந்நிலையில் அப்படகுத் தொடரணியை தொடர்ந்து சென்ற கடற்படையினர் அதனை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தினர். படையினரின் தாக்குதல்களை தொடர்ந்து அப்படகுகளில் இருந்த கடற்புலி உறுப்பினர்கள் பதில் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து சில மணிநேரம் வரையில் இரு தரப்புக்குமிடையில் அப்பகுதியில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது. (எ-5)

## வலைஞர்...

பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலே இருக்கின்ற புதுமாத்தளன் மற்றும் அம்பலவன் பொக்கணைப் பகுதிகளை கைப்பற்றிய இராணுவத்தினர் அங்கிருந்து முன்னேறி வரைஞர்மடத்தை கைப்பற்றியதாகவும் அங்கிருந்த ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இராணுவத்திடம் வந்து சேர்ந்திருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது. (எ-5)

## புலிகளின் அறிவிப்பு...

இது குறித்து பாதுகாப்பு செயலாளர் மேலும் கூறியதாவது,

தங்களது ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கையளித்துவிட்டு சரணடைய வேண்டியதுதான் தற்போது அவர்கள் செய்ய வேண்டியது. தமது தரப்பிலிருந்து பேச்சுவார்த்தைகளுக்கோ அல்லது மோதல் நிறுத்தம் என்ற பேச்சுக்கோ இடமில்லை என்றும் அவர் கூறினார்.

நடந்து சென்று நெருங்கக் கூடிய நிலையில் இலங்கை இராணுவம் இருக்கும் நிலையில், போர் நிறுத்தம் என்பது இந்தத் தருணத்தில் தேவையற்ற ஒன்று.

விடுதலைப் புலிகள் சரணடைவதன் மூலம் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட் டுள்ள அவர்கள் அங்கு மேலும் பல பொதுமக்களின் உயிர்கள் பலியாவதை தடுக்க முடியும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் தமது அரசிடம் போர் நிறுத்தம் தொடர்பான அழுத்தங்களைக் கொடுப்பதை விட்டு, விடுதலைப் புலிகளை சரணடையச் சொல்லுமாறு செய்ய வேண்டும். இது தொடர்பில் சர்வதேச சமூகம் இரட்டை நிலையை கையாள்வதாகவும் குற்றம் சாட்டினார்.

### உணவுப் பொருட்கள் செல்வதை தடுக்கவில்லை

ஒரு பயங்கரவாத அமைப்பை எதிர்த்துப் போராடிவரும் தமது அரசு அவர்களுடன் எந்த விதமான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடாது என்பதை தெளிவுபடுத்திய கோத்தபாய ராஜபக்ஷ, வடக்கே போர் நடக்கும் பகுதிகளில் இருக்கும் மக்களுக்கான உணவு மற்றும் இதர நிவாரணப் பொருட்களை வழங்கும் நடவடிக்கையை தாம் தடுக்கவில்லை என்றும், மாறாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உலக உணவுத்திட்டத்தினருக்கு அவ்வாறான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொடர்ந்து வேண்டியுள்ளதாகவும் கூறுகிறார்.

இன்னமும்,விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுமார் 15 ஆயிரம் மக்களே இருக்கிறார்கள் என்றும், முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தெரிவித்த ஒரு இலட்சத்து 65 ஆயிரம் என்னும் கணக்கீடு தவறானது என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளவை பொய் என்றும் அவர் கூறுகிறார்.

இதனிடையே, இலங்கைக்கான பயணமொன்றினை மேற்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணிகளுக்கான துணைத்தலைமைச்செயலர் ஜோன் ஹோம்ஸ் அவர்கள் வவுனியாப் பகுதிக்குச் சென்று அங்கு தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை சந்திப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ச-3,5)




நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் யாழ். நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதி உயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல் தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ். நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டிற்கு வெறுங் கையுடன் செல்வதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கிலாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல, நீங்கள் அறிந்திட அவற்றில் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்
லக்கிலாண்ட் நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (GEM) என்னும் பல

Manufactured By :
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி. 021 222 2567
(C-2383)

எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை
April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்
"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service
(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)
எமது நிறுவனத்தில் அடையாள அட்டை,பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
E.Mail: moorthydigital@gmail.com

Organ/ Violin Notes
Organ, வயலின், Guitar, புல்லாங்குழல், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள் தினமும் மாலை 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.
S.S.Rajeinthiran
75, கோவில் வீதி, நல்லூர்.
T.P. : 071 3055991
(25308)

இடம் மாற்றம்
சகல விதமான LA,TA,AN,BA,TDA,CXA,MN,STK,STR,KA ஆகிய I.Cக்கள்,ரான்சிஸ்ரர்கள்,கொண்டன்சர்கள்,ரான்ஸ்போமர்கள், T.V. ரான்ஸ்போமர்கள்,வீடியோ,ஓடியோ கெட்டுகள்,மல்ரிமீற்றர்கள்,பவுத்துகள், D.C யக்பின் வகைகள் மற்றும் எலக்ரோனிக் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
சகல விதமான எலக்ரோனிக்,எலக்றிக்கல் பொருட்களை திருத்திக் கொள்ள நாடுங்கள்.
நியூ சிற்றி ரேடேர்ஸ், 319 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 3226 குறிப்பு:-யாழ் நகரில் இந்த ஸ்தாபனத்துக்கு கிளைகள் இல்லை.
(C-2417)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.